**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர்.</u>**

OS.72/2017 நாள்.09.12.2021

வா.சா.1 - சகாதேவராஜா

**<u>1-14 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

வாசாஆ1 பாக பிரிவினை பத்திரத்தில் 4வது சொத்தாக காண்பிக்கப்பட்ட சொத்தின் பாகங்களை பாகஸ்தர்கள் பிரித்து கொண்டார்கள். முதல் பங்காளி வகையறா வாசாஆ1 பாக பிரிவினை பத்திரத்தில் கண்ட படி 4வது தபசில் சொத்துக்களை 1938ல் தனிதனியாக பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். 4வது தபசில் சொத்தில் சர்வே எண்.149ல் 3 ஏக்கர் 96 செண்ட் இருந்தது என்றால் சரிதான். அதை பிரித்து கொண்ட பின்னர் பாகஸ்தர்கள் அதை விற்று விட்டார்களா என்று எனக்கு தெரியாது. 3 ஏக்கர் 96 செண்ட்டில் யார் அனுபவித்தில் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்று எனக்கு தெரியாது. முதல் பங்காளி வகையறா ராமர் கோவிலுக்காக 20 செண்ட் நிலத்தை இனமாக கொடுத்தார்கள் என்றால் சரிதான். தற்போது அந்த 20 செண்ட் நிலம் கோவில் பராமரிப்பில் தான் உள்ளது. 2011க்கு பிறகு முதல் பிரதிவாதி கூட்டத்தில் நான் கலந்து கொள்வதில்லை. 2003லிருந்து 2011 வரை நான் 1ம் பிரதிவாதி உறுப்பினராக இருந்தேன். 2வது தபசில் சொத்தை 1ம் பிரதிவாதி வகையறா 1976ல் 17ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். எனக்கு அந்த விபரங்கள் நேரடியாக தெரியாது. 1976ல் கிரையம் கொடுத்தது சர்வே எண்.149ல் ஒரு பகுதி என்றால் அது ச.எண்.149ல் உள்ள கிணறு மட்டும். 18, 19 பிரதிவாதிகள் கிரையம் வாங்கியதும் ச.எண்.149ன் ஒரு பகுதி என்றால் சரிதான். வாசாஆ1ல் கண்ட சரத்துக்களுக்கு விரோதமாக 1ம் பிரதிவாதி வகையறா சென்றததால் தான் விரோதம் ஏற்ப்பட்டது. நான் உறுப்பினராக இருந்த சமயத்தில் அவ்வாறு 1ம் பிரதிவாதி வகையறா செயல்பட்டது சம்மந்தமாக காவல் நிலையத்திலோ, உயர் காவல் துறை

அதிகாரிகளிடமோ எந்த புகாரும் கொடுக்கவில்லை. வாசாஆ1ல் சொல்லப்பட்டுள்ள தர்ம காரியங்களுக்கு 1ம் பிரதிவாதி செய்த வரவு செலவு கணக்குகள் 1ம் பிரதிவாதி வைத்துள்ளார்கள். 2011க்கு பிறகு வாதி சங்கம் சார்பாக நாங்களும் தர்ம காரியங்கள் செய்து வருகிறோம். அதற்கான வரவு செலவு கணக்குகளை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. ஆனால் வைத்துள்ளோம். 2011க்கு பிறகு வாதி சங்கம் பிராது 1ம் தபசில் சொத்தில் கூட்டப்படவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் வாதி சங்கத்தை 1ம் பிரதிவாதியின் சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் ஆரம்பித்தோம் என்றால் அதை நான் மறுக்கிறேன். 1ம் பிரதிவாதி எதற்ச்சி அதிகாரமாக செயல்பட்டதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் வாதி சங்கத்தில் செய்துள்ள தீர்மானங்கள், வாதி சங்கத்தை பதிவு செய்துள்ள பதிவுகள் மற்றும் துணை விதிகள் எதுவும் 1ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 1 முதல் 12 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் கோரியுள்ள பரிகாரங்கள் எதுவும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பிராது 2, 3 தபசில் சொத்துக்களை பொறுத்து கோரியுள்ள விளம்புகை பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்பது அது காலவதியால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பிராதில் கோரியுள்ள எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2, 3 தபசில் சொத்துக்களை பொறுத்த கிரையம் எனக்கு அந்த சமயத்திலே தெரியும் என்றும், தெரியாது என்று பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.